**தலைப்பு 260 – நுவரெலியா மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 260 - நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுவரெலியா மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் சரியாக செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டு குறைபாடுகள்**

**(அ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தின் சூரிய மின்சார முறைமையிலிருந்து மீளாய்வாண்டில் தேசிய முறைமைக்கு 5024 மின் அலகுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட அலகுகள் 7999 ஆக இருந்தது. மின் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட அளவு உற்பத்தி செய்த அளவிற்கு ஈடுசெய்யப்பட்டு பட்டியல் தீர்வு செய்யப்பட்ட காரணத்தால் 5024 அலகுகளுக்குரிய உரிய வருமானம் மற்றும் 7999 அலகுகளுக்குரிய செலவினம் நிதிக்கூற்றுகளில் வெளிப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்பட்ட அலகுகளின் அளவு உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் அளவிற்கு ஈடு செய்யப்பட்டு வேறுபாடு மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் அளவிற்குரிய செலவினம் மற்றும் வருமானம் வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு முடியாத இருந்ததாக | வருமானம் மற்றும் செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(ஆ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவின பேரேட்டின் பிரகாரம் இயந்திர உபகரணங்கள் கொள்வனவு ரூபா 3,971,948 எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA 06) அதில் ரூபா 3,779,948 ஆக இருந்தமையால் ரூபா 192,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அம்பகமுவ பிரதேச செயலகத்தின் சொத்துக்கள் இறுதி அறிக்கையின் சொத்துக்கள் கையேற்றல் கீழ் காண்பிக்கப்பட்ட போதும் அச்சிட்டு குறிப்புகளில் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்டதன் காரணமாக இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக | திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்கள் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகளை சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 பிரதேச செயலகங்களின் உப அலுவலகங்களின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | கொத்மலே, நுவரெலியா மற்றும் வலபனே ஆகிய உப அலுவலகங்கள் நடாத்திச் செல்லும் கட்டிடங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமாக இருப்பதால் உரித்து கையேற்ற பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அம்பகமுவ மற்றும் ஹங்குரன்கெத உப அலுவலகங்கள் நடத்திச் செல்லப்படும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட உள்ளது. | சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட் வேண்டும |

**(ஈ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏசீஏ – 3 கட்டுநிதி இணக்கக்கூற்றில் காணப்பிக்கப்பட்டிருந்த 2013 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 900,878 ஆன கட்டுநிதி மீதி ஒன்று மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை களுக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | தீர்வு செய்யப்படாத முற்பண மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொத்மலே பிரதேச செயலகம், சமூர்த்தி பிரிவு மற்றும் அதனுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட மீளாய்வாண்டின் பசுமை பங்களிப்பு தேசிய விவசாய வீட்டு தோட்டத்தில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூர்த்தி அலுவலகத்தலிருந்து இருந்து 2939 வீட்டுத்தோட்டங்களுக்காக பெறுகை நடைமுறை இன்றி வெவ்வேறு வகையான 117,560 நாற்றுக்கள் ரூபா 529,020 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இக்கொடுப்பனவுக்குரிய உறுதிச்சீட்டுக்களுடன் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பணம் பிரதேச செயலகத்தினால் சமூர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பணம் உரிய நாற்று மேடையாளர்களின் தனிப்பட்ட கணக்குக்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாகவும் | பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. எதிர்பார்க்கப்பட்ட நலன்களை (Out come) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு 06 சந்தர்ப்பங்களில் தேசிய முதியோர் செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,081,650 ஆன தொகையை குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை | குறித்த பணத்தை நோக்கத்துடன் செயற்பாட்டுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் கம்பெரலிய துரித கிராமிய நிகழ்ச்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நுவரெலிய மாவட்டத்தின் சமய தாபனங்களுக்காக சூரிய சக்தி முறைமை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்குரியதாக அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் ரூபா 17,200,380 செலவிடப்பட்டு சமய வழிபாட்டு தளமொன்றில் நிறுவப்பட்டிருந்த 14 சூரிய சக்தி முறைமைகள் மூலம் உருவாகும் மின்சாரத்தை தேசிய மின் முறைமையுடன் சேர்த்தல் ஆண்டின் இறுதி திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.˙ | மின்சார சபையுடன் கலந்துரையாடி இந்த செயற்பாட்டினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உற்பத்தி செய்யும் மின் அலகுகளை தேசிய மின்சார முறைமைக்கு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெவ்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக 2019 - 2022 இற்கு இடைபட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,730,000 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் பொது வைப்பு கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டம் இவ்வாண்டில் செயற்படுத்தி பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. | பெற்றுக்கொண்ட பணத்தை நோக்கத்துக்குட்ப செயற்பாட்டுக்கு பயன்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டிருந்தமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மே 04 ஆந் திகதிய DMC/miti/Pro/Nuwaraeliya/2021/01 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் வலப்பனை கங்கார கொள்ள பெயருடைய கிராமத்தில் கற்கள் விழும் அனர்த்தத்தை | ˙நிர்மாணத்தினை பூர்த்தி செய்வதற்கு தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்குமாறு முன்மொழிவொன்றை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக் கொண்டு முறையான கண்காணிப்பு மூலம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறைக்கும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை இடைநிறுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,912,660 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் பெறுபேறுகளை அடைவதற்கு முடியாது இருந்தது. | | |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினால் விவசாய பணிப்பாளர் அலுவலகத்தினால் 30 நலனாளிகளுக்காக செயற்படுத்தப்பட்டு இருந்த நுண் நீர் வழங்கள் தொகுதி வழங்கப்படாத இருக்கும் போது நுண் நீர் முறைமை மற்றும் ஏனைய உப பாகங்களுக்காக ரூபா 3,239,975 ஆன காசோலை எழுதி பின்னர் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆம் திகதிய GA/NE/AGRI/YE projects ஆம் இலக்க மாவட்ட விவசாய பணிப்பாளரின் மூலம் விவசாய அமைச்சின் மேலதிக பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் இச்செயற்திட்டத்தின் செயன் முன்னேற்றம் நூறு சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் எந்த ஒரு செயன் முன்னேற்றத்தையும் கையேற்று இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்குரிய 20 நுண் நீர் வளங்கள் தொகுதி கிடைக்கவில்லை என்றும் எதிர்காலத்தில் இவ்வாறானது ஒன்றை இடம்பெறாமல் இருப்பதை கவனத்திற்கு கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொருட்கள் கிடைப்பதற்கு காசோலை எழுதக் கூடாததுடன் முறையான கண்காணிப்பொன்றுடன் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் |

### 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன் முன்னேற்றம் பெற்றிராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் 2015 மற்றும் 2022 காலப்பகுதியில் ரூபா 5,849,155 தொகை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வட்டவல தொழிற்பயிற்சி நிலைய நிர்மாணம் விதுளிபுற தெற்கு நூலகத்தின் மேல் மாடியில் சுயதொழில் பயிற்சி நிலைய நிர்மாணம், மஸ்கெலிய சுய தொழிலாளர்களுக்கான தொழிற்சாலை கட்டிட நிர்மாணம் மற்றும் கிரிவன்எளிய பத்தன சமூக மண்டப நிர்மாணம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டன. | அரச சார்பற்ற நிறவனங்களின் ஒத்துழைப்புடன் குறித்த கட்டிடங்களை பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | குறித்த கட்டிடங்களை பூர்த்தி செய்து நோக்கத்திற்குட்பட்ட செயற்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கிராமசக்தி வேலை திட்டத்தின் கீழ் நுவரெலிய மாவட்டத்தில் பூமர செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 8,992,000 தொகை செலவிடப்பட்டு நுவரெலிய பிரதேச செயலப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 29 பாதுகாப்பு குகைகள் கலட்டி அகற்றப்பட்டு வலப்பனே கலகடவத்த பத்தின கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் எந்த ஒரு ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன 02 பாதுகாப்பு குகைகள் சிதைவடைந்து இருந்ததுடன், ஒரு குகை காணாமல் போயிருந்தது இதன் காரணமாக அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 843,000 ஆக இருந்தது. | அரச சார்பற்ற அமைப்புகளின் நிதி ஏற்பாட்டின் பேரில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நோக்கத்திற்கு ட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

| **கணக்கீட்டு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 802(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் மாவட்ட செயலகத்திற்குரிய மொத்தம் ரூபா 5,683,929 ஆன இரண்டு வாகனங்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டன. | ஒரு வாகனம் தற்போது குறைப் பயன்பாட்டில் உள்ளதுடன் மற்றைய வாகனம் அமைச்சின் அங்கீகாரத்தின் பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | குறித்த வாகனத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |